அசல் வழக்கு எண்:92/2019
நாள்: 27.03.2023
PW .1
பெயர்: வெங்கடாச்சலம்
த/பெ :பெரியான்
வயது : 72
ஊர் :அன்னவாசல்
தொழில்: கூலிவேலை

நான் இவ்வழக்கின் வாதியாவேன். நான் ஏற்கனவே எனது தரப்பு நிரூபண வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பின்வரும் ஆவணங்களை வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) கடந்த 23.06.1926 ல் ஆம் தேதியிட்ட புதுக்கோட்டை மாவட்ட சமஸ்தானத்தில் பெரியநைனார் கோவிலுக்கு எனது குடும்பத்தினர் பெயரில் வழங்கப்பட்ட பூஜை செய்வதற்கான உரிமை மூல பத்திரம் அசல் **(வா.சா.ஆ.1/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 24.08.1961 ஆம் தேதியிட்ட எனது தகப்பனார் பெயரில் ஏற்பட்ட பெரிய நைனார் கோவில் சர்வே எண்.502/24 ல் நஞ்சை 26 சென்ட்டிற்கான செட்டில்மென்ட்டிற்கான அசல் **(வா.சா.ஆ.2/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 24.08.1961 ஆம் தேதியிட்ட எனது தகப்பனார் பெயரில் ஏற்பட்ட சபரிக்கிழவர் கோவில் சர்வே எண்.144-2 ல் நஞ்சை 36 செண்டிற்கான செட்டில் மென்ட் ஆவணம் அசல் **(வா.சா.ஆ.3/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை</u>

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக இந்த வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

//sd/-வெங்கடாச்சலம்,
PW.1.

//sd//- எஸ்.அன்புதாசன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் அவர்கள்.